# COMPUTER BASED TEST - 2023

**PAPER - II / தாள்- II**

**COMPULSORY TAMIL LANGUAGE ELIGIBILITY TEST (SSLC standard) and GENERAL STUDIES (Degree standard)**

**கட்டாய தமிழ்மொழித் தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்பு தரம்) மற்றும் பொது அறிவு (பட்டயப்படிப்புத் தரம்)**

## பகுதி-அ (தமிழ் தகுதி & மதிப்பீட்டுத் தேர்வு)

## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**வினாக்கள் : 1–100** | **மொத்த மதிப்பெண்கள்: 150**

**Questions : 1–100** | **Total Marks : 150**

---

1. அடைப்புக்குள் உள்ள சொல்லை பிரித்தெழுதக் கிடைப்பது (எந்தமிழ்நா)

(A) எந் + தமிழ் + நா
(B) எந்த + தமிழ் + நா
(C) எம் + தமிழ் + நா
(D) எந்தம் + தமிழ் + நா
(E) விடை தெரியவில்லை

2. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (சுட்டல்)

(A) காட்டு விலங்குகளைச் ———— தடை செய்யப்பட்டுள்ளது.
(B) செய்த தவறுகளை ———— திருந்த உதவுகிறது.
(C) தீயினால் ———— புண் உள்ளாறும்.
(D) தலையில் மல்லிகைப் பூ ————
(E) விடை தெரியவில்லை

3. சரியான இணைப்புச் சொல் தேர்க :

காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர். அவர் எளிமையை விரும்பியவர்.

(A) ஏனெனில்
(B) அதனால்
(C) ஆகையால்
(D) அதுபோல
(E) விடை தெரியவில்லை

4. சரியான இணைப்புச் சொல்

மாணிக்கம் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர்.

அவர் எளிமையை விரும்பியவர்

(A) எனவே

(B) ஏனெனில்

(C) மேலும்

(D) அதனால்

(E) விடை தெரியவில்லை

5. சரியான இணைப்புச் சொல் தருக.

மழை —————— உலகில் உயிர்கள் இல்லை.

(A) ஏனெனில்

(B) இல்லையெனில்

(C) ஆகையால்

(D) அதனால்

(E) விடை தெரியவில்லை

6. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

பட்டமரத்தின் வருத்தங்கள் ——————?

(A) யார்?

(B) யாவை?

(C) எப்படி?

(D) எதற்கு?

(E) விடை தெரியவில்லை

7. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

—————— பேர் சுற்றுலா சென்றனர்?

(A) எத்தகைய

(B) எப்போது

(C) எத்தனை

(D) எவ்வாறு

(E) விடை தெரியவில்லை

8. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

“சான்றோர்க்கு அழகாவது —————— ”

(A) எப்படி
(B) எது
(C) எங்கு
(D) ஏன்
(E) விடை தெரியவில்லை

9. பொருத்தமான காலம் அமைத்தல்.

“காண்” என்னும் சொல்லின் எதிர்காலத்தை தேர்ந்தெடுக்க.

(A) காண்கிறான்
(B) காண்பான்
(C) கண்டான்
(D) கண்டேன்
(E) விடை தெரியவில்லை

10. கீழ்கண்டவற்றுள் எந்தச் சொல்லை இடம்பெற்றுள்ள பிற சொற்களுடன் இணைத்து புதிய சொல்லை உருவாக்க இயலாது?

வான், மழை, விண், பூ, மணி

(A) பூ
(B) வான்
(C) விண்
(D) மணி
(E) விடை தெரியவில்லை

11. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

சுவை, காப்பியம், பூ, வான், பொன், குறள்

(A) காப்பியம் குறள்
(B) சுவை பூ
(C) காப்பியச் சுவை
(D) பூ பொன்
(E) விடை தெரியவில்லை

12. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று.

இதைக் குடுத்துடுங்க

(A) இதைக் குடித்து விடுங்கள்
(B) இதைக் கொடுத்து விடுங்கள்
(C) இதைக் கொடுத்து விட்டீர்கள்
(D) இதைக் குடித்து வையுங்கள்
(E) விடை தெரியவில்லை

13. இரு பொருள் தருக :

விளக்கு

(A) மின் விளக்கு, விலங்கு
(B) குழல் விளக்கு, விளங்கு
(C) விலக்கு அளித்தான், விளங்கினான்
(D) அகல் விளக்கு, தெளிவுபடுத்து
(E) விடை தெரியவில்லை

14. உண்மை – என்பதன் எதிர்ச்சொல் தருக.

(A) வாய்மை
(B) தூய்மை
(C) பொய்மை
(D) மெய்ம்மை
(E) விடை தெரியவில்லை

15. இரு பொருள் தருக : ஆறு

ஆறு

(A) காடு, மலை
(B) குளம், குட்டை
(C) கோடு, வட்டம்
(D) நதி, எண்
(E) விடை தெரியவில்லை

16. குறில் நெடில் பொருள் வேறுபாடு :

கொள் – கோள்

(A) பெறு – விண்மீன்
(B) பெறு – பேறு
(C) கொடு – கலகம்
(D) பேறு – பெறு
(E) விடை தெரியவில்லை

17. கோடிட்ட இடங்களுக்குப் பொருந்திய சொற்களைத் தேர்க.

————————, நான் ———————— செல்கிறேன்.

(A) கொடு, கோடு
(B) மடு, மாடு
(C) அடு, ஆடு
(D) விடு, வீடு
(E) விடை தெரியவில்லை

18. கூற்று, காரணம் – சரியா? தவறா?

கூற்று : மாநகராட்சி சிறப்புக் கூட்டமொன்றில் "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று முழங்கினார் ம.பொ.சி.

காரணம் : ஆந்திரத்தின் தலைநகராக சென்னை இருக்க வேண்டும் என்பதை எதிர்த்து ம.பொ.சி. முழங்கிய முழக்கம் இது.

(A) கூற்று தவறு; காரணம் சரி
(B) கூற்று சரி; காரணம் சரி
(C) கூற்று சரி; காரணம் தவறு
(D) கூற்று தவறு; காரணம் தவறு
(E) விடை தெரியவில்லை

19. கலைச்சொல் அறிதல்.

Linguistics

(A) ஊடகம்

(B) மொழியியல்

(C) ஒலியியல்

(D) இதழியல்

(E) விடை தெரியவில்லை

20. கலைச்சொற்களை அறிதல்.

Consonant

(A) உயிரொலி

(B) ஒலியன்

(C) மெய்யொலி

(D) மூக்கொலி

(E) விடை தெரியவில்லை

21. கலைச்சொற்களை அறிதல்.

Space Technology என்பதன் தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

(A) மீநுண் தொழில் நுட்பம்

(B) உயிரித் தொழில் நுட்பம்

(C) விண்வெளித் தொழில் நுட்பம்

(D) விண்வெளிக் கதிர்கள்

(E) விடை தெரியவில்லை

22. கலைச்சொல் அறிக.

LAUNCH VEHICLE என்ற சொல்லின் கலைச்சொல் யாது?

(A) வானூர்தி

(B) ஏவு ஊர்தி

(C) ஏவுகணை

(D) நிலவு ஊர்தி

(E) விடை தெரியவில்லை

பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு : (23–27)

தமிழர்கள் முற்காலத்திலேயே கப்பல் கட்டும் கலையை நன்கு அறிந்திருந்தனர். கப்பல் கட்டும் கலைஞர்கள் கம்மியர் என்று அழைக்கப்பட்டனர். இதனைக் "கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஉய்" என்னும் மணிமேகலை அடியால் அறியலாம். தண்ணீரால் பாதிப்படையாத மரங்களையே கப்பல் கட்டப் பயன்படுத்தினர். நீர்மட்ட வைப்பிற்கு வேம்பு, இலுப்பை, புன்னை, நாவல் போன்ற மரங்களைப் பயன்படுத்தினர். பக்கங்களுக்கு தேக்கு, வெண்தேக்கு போன்ற மரங்களைப் பயன்படுத்தினர். நீளம், அகலம், உயரம் ஆகியவற்றைத் தச்சுமுழம் என்னும் நீட்டலளவையால் கணக்கிட்டனர். பெரிய படகுகளில் முன்பக்கத்தை யானை, குதிரை, அன்னம் முதலியவற்றின் தலையைப் போன்று வடிவமைப்பதுமுண்டு. கரிமுக அம்பி, பரிமுக அம்பி என்று இவை அழைக்கப்பட்டன.

23. கப்பல் கட்டும் கலைஞர்களை மணிமேகலை எவ்வாறு அழைக்கிறது?

(A) கலம்
(B) கம்மியர்
(C) கூஉய்
(D) கூட்டம்
(E) விடை தெரியவில்லை

24. தச்சுமுழம் என்பது

(A) முகத்தலளவை
(B) எண்ணளவை
(C) நீட்டலளவை
(D) கணக்களவை
(E) விடை தெரியவில்லை

25. முன்பக்கத்தை குதிரை போன்று வடிவமைப்பது எவ்வாறு அழைக்கப்பட்டது?

(A) அரிமுகம்
(B) கரிமுகம்
(C) நரிமுகம்
(D) பரிமுகம்
(E) விடை தெரியவில்லை

26. நீர்மட்ட வைப்பிற்கு பயன்படுத்தப்பட்ட மரங்கள்

(A) நாவல்
(B) தேக்கு
(C) பனை
(D) தென்னை
(E) விடை தெரியவில்லை

27. எதனால் பாதிப்படையாத மரங்களைக் கப்பல் கட்டப் பயன்படுத்தினர்?

(A) காற்று
(B) நீர்
(C) நெருப்பு
(D) நிலம்
(E) விடை தெரியவில்லை

28. கீழ்காணும் தொடர்களில் (ஒரு – ஓர்) சரியாக அமைந்த தொடர் எது?

(A) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் பரந்த குளம் இருந்தது
(B) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் இனிய குளம் இருந்தது
(C) ஒரு அழகிய சிற்றூரில் ஒரு இனிய குளம் இருந்தது
(D) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது
(E) விடை தெரியவில்லை

29. ஒரு, ஓர் பயன்பாட்டில் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) ஒரு ஊரில் ஒரு விவசாயி இருந்தார்.
(B) ஓர் ஊரில் ஓர் விவசாயி இருந்தார்.
(C) ஓர் ஊரில் ஒரு விவசாயி இருந்தார்.
(D) ஒரு ஊரில் ஓர் விவசாயி இருந்தார்
(E) விடை தெரியவில்லை

30. கீழ்காணும் தொடர்களில் (ஒரு–ஓர்) சரியாக அமைந்த தொடர் எது?

(A) ஓர் பெரிய இடத்தில் அமர்ந்தான்

(B) ஓர் இடத்தில் அமர்ந்தான்

(C) ஒரு அழகிய வனத்தில் அமர்ந்தான்

(D) ஒரு இடத்தில் அமர்ந்தான்

(E) விடை தெரியவில்லை

31. சொல் – பொருள் – பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மூத்தோர் | 1. | பெரியோர் |
| (b) | மாற்றார் | 2. | வழி |
| (c) | நெறி | 3. | இகழும்படி |
| (d) | தூற்றும்படி | 4. | மற்றவர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 1 | 4 | 2 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

32. சொல் – பொருள் – பொருத்துக.

(a) மழலை 1. மகிழ்ச்சி
(b) வனப்பு 2. குழந்தை
(c) பூரிப்பு 3. உடல்
(d) மேனி 4. அழகு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

33. சொல் – பொருள் – பொருத்துக.

(a) புலி 1. முழங்கும்
(b) யானை 2. அலறும்
(c) சிங்கம் 3. உறுமும்
(d) ஆந்தை 4. பிளிரும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

34. ஒருமை – பன்மை.

பிழையற்றத் தொடரைக் கண்டறிக.

(A) பசு கன்றை ஈன்றன

(B) பசு கன்றை ஈன்றார்கள்

(C) பசு கன்றை ஈன்றது

(D) பசு கன்றை ஈன்றனர்

(E) விடை தெரியவில்லை

35. பொருத்தமுடைய கலைச் சொல்லைக் கண்டறிக :

(A) EMBLEM – சின்னம்

(B) THESIS – அறிவாளர்

(C) INTELLECTUAT – ஆய்வேடு

(D) SYMBOLISM – மொழியியல்

(E) விடை தெரியவில்லை

36. ஒருமை – பன்மை பிழையற்ற தொடர் எது?

(A) குதிரை அவள் அருகில் வந்து நின்றது

(B) குதிரை அவள் அருகில் வந்து நின்றாள்

(C) குதிரை அவள் அருகில் வந்து நின்றன.

(D) குதிரை அவள் அருகில் வந்து நின்றான்

(E) விடை தெரியவில்லை

37. பொம்மையை உடைத்தது யார்? – இது எவ்வகைத் தொடர்?

(A) கட்டளைத் தொடர்

(B) வினாத் தொடர்

(C) செய்தித் தொடர்

(D) உணர்ச்சித் தொடர்

(E) விடை தெரியவில்லை

38. சொற்களின் கூட்டப் பெயர்கள் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஆ | 1. | குவியல் |
| (b) | ஆடு | 2. | மந்தை |
| (c) | புல் | 3. | நிரை |
| (d) | கல் | 4. | கட்டு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

39. கூட்டுப் பெயரை எழுது.

எறும்பு

(A) எறும்பு வரிசை

(B) எறும்பு சாரை

(C) எறும்பு புற்று

(D) எறும்பு கூடு

(E) விடை தெரியவில்லை

40. கூட்டப் பெயரை எழுதுக.

தென்னை

(A) தோப்பு

(B) வயல்

(C) தோட்டம்

(D) காடு

(E) விடை தெரியவில்லை

41. சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டறிக.

கல் என்னும் சொல்லின் சரியான கூட்டுப் பெயர் எது?

(A) கற்கட்டு

(B) கற்குவியல்

(C) கட்குலை

(D) கட்குவியல்

(E) விடை தெரியவில்லை

42. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.

இலைக்கு வேறு பெயர் ——————

(A) தலை

(B) தழை

(C) தளை

(D) தாளை

(E) விடை தெரியவில்லை

43. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.

வாழ்க்கையில் —————— மீண்டும் வெல்லும். இதைத் தத்துவமாய்த் —————— கூத்து சொல்லும்.

(A) வெற்றி – தோல்வி

(B) தோற்பவை – தோற்பாவை

(C) நன்மை – தீமை

(D) தோல்வி – வெற்றி

(E) விடை தெரியவில்லை

44. 'அணிகலன், புன்னகை' என்ற பொருள்களைத் தரும் சொல்லைக் கண்டறிக.

(A) அணி

(B) உவகை

(C) நகை

(D) மாலை

(E) விடை தெரியவில்லை

45. அகரவரிசைப்படி சரியாக அமைந்த வரிசையைத் தேர்க.

பைந்தமிழ், புதுமனை, பொதுவுடைமை, போராட்டம், பாராட்டு, பேருந்து, பதிவிறக்கம்.

(A) புதுமனை, போராட்டம், பாராட்டு, பைந்தமிழ், பேருந்து, பதிவிறக்கம், பொதுவுடைமை.

(B) பைந்தமிழ், புதுமனை, பொதுவுடைமை, போராட்டம், பாராட்டு, பேருந்து, பதிவிறக்கம்.

(C) பதிவிறக்கம், பாராட்டு, புதுமனை, பேருந்து, பைந்தமிழ், பொதுவுடைமை, போராட்டம்.

(D) புதுமனை, பைந்தமிழ், போராட்டம், பொதுவுடைமை, பாராட்டு, பேருந்து, பதிவிறக்கம்.

(E) விடை தெரியவில்லை

46. சரியான இணையைக் கண்டறிக

(A) ஆஸ்தி – துன்பம்

(B) அனுமதி – இசைவு

(C) உஷார் – இயல்பு

(D) இம்சை – மணிமுடி

(E) விடை தெரியவில்லை

47. விடைக்கேற்ற வினா அமைக்க :

கோதை கவிதையைப் படித்தாள்

(A) கோதை எதைப் படித்தாள்?

(B) கோதை எப்படிப் படித்தாள்?

(C) கோதை எங்கே படித்தாள்?

(D) கோதை ஏன் படித்தாள்?

(E) விடை தெரியவில்லை

48. வேர்ச் சொல்லைக் கொடுத்து வினையாலணையும் பெயர் உருவாக்கல்.

தா

(A) தந்தான்

(B) தந்து

(C) தந்த

(D) தந்தவர்

(E) விடை தெரியவில்லை

49. வாழ்க்கை – என்பதன் வேர்ச்சொல்லை எழுதுக.

(A) வாழ் (B) வாழு

(C) வாழ (D) வாழ்ந்த

(E) விடை தெரியவில்லை

50. தந்தான் – வேர்ச்சொல்லைத் தருக.

(A) தருதல் (B) தரு

(C) தா (D) தந்த

(E) விடை தெரியவில்லை

51. வேர்ச் சொல்லைத் தேர்வு செய்க.

கேட்டனன்

(A) கேட் (B) கேட்ட

(C) கேல் (D) கேள்

(E) விடை தெரியவில்லை

52. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க.

பார்த்தான்

(A) பார்த்த (B) பார்

(C) பார்த்து (D) பார்த்தல்

(E) விடை தெரியவில்லை

53. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

திங்கள்

(A) மாதம், கிழமை, சந்திரன், நிலவு

(B) வாரம், நாள், சந்திரன், பகலவன்

(C) கிழமை, சந்திரன், நாள், சூரியன்

(D) சந்திரன், சூரியன், பகலவன், பரிதி

(E) விடை தெரியவில்லை

54. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

எழினி, கிழி, படாம், திரைச்சீலை எனும் சொற்கள் எதனைக் குறிக்கும்.

(A) ஓவியம் வரையப் பயன்படும் துணி

(B) நாடக அரங்கின் திரைச்சீலை

(C) பாய்மரம்

(D) எழிலோவியம்

(E) விடை தெரியவில்லை

55. ஒலி வேறுபாடறிந்து பொருள் அறிக.

(A) வயலில் களை எடுத்தனர்

(B) வயலில் கலை எடுத்தனர்

(C) வயலில் கழை எடுத்தனர்

(D) வயளில் காளை எடுத்தனர்

(E) விடை தெரியவில்லை

56. கூரை, கூறை – பொருள் வேறுபாடு உணர்க.

(A) கூறுதல், விளக்குதல்

(B) வீட்டின் கூரை, புடவை

(C) மேல், கீழ்

(D) சீராக்குதல், கூராக்குதல்

(E) விடை தெரியவில்லை

57. மயங்கொலிப் பிழையற்ற தொடர்களை அறிக.

1. பறவையிடம் இருப்பது இறகு
2. பறவைக்கு இருப்பது அலகு
3. மன்னரிடம் இருப்பது வாள்
4. சிவப்பு நிறத்தில் இருப்பது குறுதி

(A) 1, 3, 4 சரி
(B) 2, 3, 4 சரி
(C) 1, 2, 3 சரி
(D) 2, 4, 3 சரி
(E) விடை தெரியவில்லை

58. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தருக.

Trust

(A) அறக்கட்டளை
(B) தன்னார்வலர்
(C) சமூகப் பணியாளர்
(D) தொண்டு நிறுவனம்
(E) விடை தெரியவில்லை

59. ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடு.

Equestrain

(A) தலைமைப்பண்பு
(B) சமத்துவம்
(C) மனநோய்
(D) குதிரையேற்றம்
(E) விடை தெரியவில்லை

60. சொற்களை ஒழுங்குபடுத்துக

(A) ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது

(B) அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ்

(C) தமிழ் ஏகலை கலையை அம்புவிடும் என்றது

(D) அம்புவிடும் கலையை தமிழ் ஏகலை என்றது

(E) விடை தெரியவில்லை

61. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

கூடை ——————

(A) செய்

(B) முடை

(C) கட்டு

(D) படை

(E) விடை தெரியவில்லை

62. பிழை நீக்கி எழுதுக.

அந்தப் புஞ்சை ரோட்டோரத்தில் இருந்தது

(A) அந்தப் புன்செய் சாலையோரத்தில் இருந்தது

(B) அந்தப் புஞ்சை சாலையோரத்தில் இருந்தது

(C) அந்தப் புன்செய் ரோட்டோரத்தில் இருந்தது

(D) அந்தப் பூஞ்சை சாலையோரத்தில் இருந்தது

(E) விடை தெரியவில்லை

63. இன எழுத்துக்கள் அடிப்படையில் பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) மஞ்சள்
(B) கல்வி
(C) வந்தான்
(D) தம்பி
(E) விடை தெரியவில்லை

64. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) குறிஞ்சி
(B) நெய்தல்
(C) முல்லை
(D) மதுரை
(E) விடை தெரியவில்லை

65. பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு
பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) பண்பு
(B) மஞ்சு
(C) கண்டு
(D) எஃகு
(E) விடை தெரியவில்லை

66. இடர் ஆழி என்பதன் எதிர்ச்சொல்

(A) துன்பக்கடல்
(B) துன்பச் சக்கரம்
(C) இன்பக் கடல்
(D) தூயச் சக்கரம்
(E) விடை தெரியவில்லை

67. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுக.
உண்மை

(A) பொய்மை
(B) விலகு
(C) தெளிவு
(D) சோர்வு
(E) விடை தெரியவில்லை

68. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்.

'மிசை' – என்பதன் எதிர்ச்சொல் என்ன?

(A) கீழே
(B) மேலே
(C) இசை
(D) வசை
(E) விடை தெரியவில்லை

69. சேர்த்தெழுதுக :

எதிர் + ஒலிக்க

(A) எதிரலிக்க
(B) எதிர்ஒலிக்க
(C) எதிரொலிக்க
(D) எதிர்ரொலிக்க
(E) விடை தெரியவில்லை

70. சேர்த்தெழுதுதல்.

நெடுமை + தேர் – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

(A) நெடுதேர்
(B) நெடுத்தேர்
(C) நெடுந்தேர்
(D) நெடுமைதேர்
(E) விடை தெரியவில்லை

71. தேம்பாவணி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

(A) தேம் + பாவணி
(B) தேம் + அணி
(C) தேம்பா + அணி
(D) தேம்பு + பாவணி
(E) விடை தெரியவில்லை

72. சரியான நிறுத்தற்குறிகளை தேர்ந்தெடு.

(A) 'எது, என்ன, எங்கு, எப்படி' போன்றன வினாச்சொற்கள் ஆகும்

(B) எது, என்ன? எங்கு, எப்படி போன்றன வினாச்சொற்கள் ஆகும்

(C) எது, என்ன, எங்கு, எப்படி போன்றன வினாச்சொற்கள் ஆகும்

(D) 'எது' 'என்ன' 'எங்கு, எப்படி போன்றன' வினாச்சொற்கள் ஆகும்

(E) விடை தெரியவில்லை

73. பொருத்தமான நிறுத்தற்குறிகள் அமைந்த தொடரைத் தேர்க.

(A) வண்டியில் ஏறுங்கள் அவர் அன்புக் கட்டளையிட்டார்.

(B) "வண்டியில் ஏறுங்கள்.....!" அவர் அன்புக் கட்டளையிட்டார்

(C) வண்டியில் ஏறுங்கள்! அவர் அன்புக் கட்டளையிட்டார்

(D) வண்டியில் ஏறுங்கள். அவர் அன்புக் கட்டளையிட்டார்.

(E) விடை தெரியவில்லை

74. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுது.

சைதாப்பேட்டை

(A) சைதா

(B) சைதாபேட்டையூர்

(C) சாதாப்பேட்டை

(D) சைதை

(E) விடை தெரியவில்லை

75. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

தஞ்சாவூர்

(A) தஞ்சை

(B) தாஞ்சூர்

(C) தஞ்சையூர்

(D) தாஞ்சை

(E) விடை தெரியவில்லை

76. கும்பகோணம் என்பதன் மரூஉ

(A) குடந்தை (B) கும்பம்

(C) கோணம் (D) கோவை

(E) விடை தெரியவில்லை

77. ஊர்ப்பெயர்களின் மரூஉவை கண்டறிக.

திருச்சிராப்பள்ளி என்பதன் மரூஉவைத் தேர்ந்தெடுக்க.

(A) திருவை (B) திருச்சி

(C) திருப்பள்ளி (D) திருகை

(E) விடை தெரியவில்லை

78. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

காலிங் பெல்

(A) அழைப்போசை (B) அழைப்பாளர்

(C) அழைக்கும் ஒலி (D) அழைப்பு மணி

(E) விடை தெரியவில்லை

79. பிறமொழி சொல்லுக்கான தமிழ்ச் சொல்லைக் கண்டறி.

'DIDACTIC COMPILATION'

(A) நீதிநூல் திரட்டு (B) பதிற்றுப்பத்து

(C) இரட்டைக்காப்பியங்கள் (D) வேத மறை நூல்

(E) விடை தெரியவில்லை

80. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்

'ஆன்டிபயாடிக்' என்பதன் தமிழ்ச் சொல்

(A) மருந்து
(B) மாத்திரை
(C) நுண்ணுயிர் முறி
(D) மூலிகை
(E) விடை தெரியவில்லை

81. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் வினவியதற்கு "அதோ, அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ———————— விடை.

(A) வினா எதிர் வினாதல் விடை
(B) மறை விடை
(C) சுட்டு விடை
(D) இனமொழி விடை
(E) விடை தெரியவில்லை

82. விடை வகைகள் :

ஊருக்குப் போவாயா? என்ற கேள்விக்குப் "போகமாட்டேன்" எனக் கூறல்

(A) ஏவல் விடை
(B) இனமொழி விடை
(C) மறை விடை
(D) நேர் விடை
(E) விடை தெரியவில்லை

83. எவ்வகை விடை எனத் தேர்க.

"கடைத்தெரு எங்குள்ளது?" என்ற வினாவிற்கு இடப்பக்கத்தில் உள்ளது. எனக் கூறல்.

(A) ஏவல் விடை
(B) இனமொழி விடை
(C) சுட்டு விடை
(D) நேர் விடை
(E) விடை தெரியவில்லை

84. அலுவல் சார்ந்த கலைச்சொல்

Entrepreneur – என்பதன் தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(A) கணக்காயர்
(B) பொறியாளர்
(C) தொழில் முனைவோர்
(D) மருத்துவர்
(E) விடை தெரியவில்லை

85. அலுவல் சார்ந்த கலைச்சொல் தேர்ந்தெழுதுதல்.

Responsibility

(A) செல்வம்
(B) லட்சியம்
(C) நற்பண்பு
(D) கடமை
(E) விடை தெரியவில்லை

86. அலுவல் சார்ந்த சரியான கலைச்சொல்லைக் கண்டறிக.

Escalator

(A) மின்படிக்கட்டு
(B) மின்தூக்கி
(C) மின்னஞ்சல்
(D) மின்நூலகம்
(E) விடை தெரியவில்லை

87. கலைச்சொல்லிற்க்கானப் பொருளைத் தேர்ந்தெடு.

'HOMOGRAPH'

(A) உயிரெழுத்து
(B) ஒப்பெழுத்து
(C) சிலையெழுத்து
(D) தலையெழுத்து
(E) விடை தெரியவில்லை

88. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

‘கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல’ — உவமை கூறும் பொருள் தெளிக.

(A) தற்செயல் நிகழ்வு
(B) எதிர்பாரா நிகழ்வு
(C) எதிர்பார்த்த நிகழ்வு
(D) திட்டமிட்ட நிகழ்வு
(E) விடை தெரியவில்லை

89. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்

பசுமரத்து ஆணி போல

(A) எளிதில் மனதில் பதியாமை
(B) எளிதில் மனதில் அகழாமை
(C) எளிதில் மனதில் புரிதல்
(D) எளிதில் மனதில் பதிதல்
(E) விடை தெரியவில்லை

90. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் – தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை.

“செயப்பாட்டு வினையைத் தெரிவுச் செய்”

(A) பாடல் அவளால் பாடப்பட்டது
(B) பந்து உருண்டது
(C) என் அண்ணன் நாளை வருவான்
(D) அவள் பாடினாள்
(E) விடை தெரியவில்லை

91. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்

கந்தனைத் திருந்தச் செய்தான்

(A) செய்வினைத் தொடர்
(B) செயப்பாட்டு வினைத் தொடர்
(C) தன்வினைத்தொடர்
(D) பிறவினைத்தொடர்
(E) விடை தெரியவில்லை

92. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்

கவிதா உரை படித்தாள்

(A) வினாத் தொடர்

(B) செய்வினைத்தொடர்

(C) கட்டளைத்தொடர்

(D) செயப்பாட்டு வினைத் தொடர்

(E) விடை தெரியவில்லை

93. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

"தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறு தழுவுதல் இரண்டாயிரம் ஆண்டு காலத் தொன்மையுடையது"

(A) வீர விளையாட்டான ஏறு தழுவுதல் எவ்வளவு நேரமுடையது?

(B) இந்தியர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்குவது எத்தனை ஆண்டு?

(C) தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறு தழுவுதல் எத்தனை ஆண்டுகாலத் தொன்மையுடையது?

(D) தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் பொங்கல் எத்தனை ஆண்டுகாலத் தொன்மையுடையது?

(E) விடை தெரியவில்லை

94. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.

தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் கவிஞர் வாணிதாசன்

(A) தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்பது என்ன?

(B) தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் யார்?

(C) தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் யாரை குறிக்கும்?

(D) புகழப்படும் வேர்ட்ஸ்வொர்த் யார்?

(E) விடை தெரியவில்லை

95. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்.

விரிந்தது – விரித்தது

(A) மயில் தோகையை விரித்ததால் இதழ்கள் விரிந்தன

(B) பூக்கள் விரிந்ததால் மயில்கள் ஆடின

(C) இதழ்கள் விரிந்ததால் மயில்கள் அகவின

(D) மழைக்காற்று வீசியதால், பூவின் இதழ்கள் விரிந்தன; மயில் தோகையை விரித்தது

(E) விடை தெரியவில்லை

96. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிக.

'பொருந்து, பொருத்து'

(A) பொருத்து இருந்தால் காலம் கைகூடும்

(B) விடையினை சரியாக பொருத்தி, வேலையில் பொருந்து

(C) வேலையில் பொருத்தினால் இலாபம் அடையலாம்

(D) பொறுத்தார் பூமி ஆள்வார்

(E) விடை தெரியவில்லை

97. இரு வினைகளின் பொருள் வேறுபாடு அறிக. சரியான தொடரைக் கண்டறி.

அறுத்து – அறுந்து

(A) கதிர் அறுந்ததால் விரல் அறுத்தது

(B) கதிர் அறுந்து விரல் அறுந்தது

(C) கதிர் அறுத்தபோது விரல் அறுந்தது

(D) கதிர் அறுந்தபோது விரல் அறுத்தது

(E) விடை தெரியவில்லை

98. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்.

(A) தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது

(B) தம்மின் மக்கள்தம் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது

(C) தம்மின்தம் மக்கள் மாநிலத்து அறிவுடைமை மன்னுயிர்க்கு எல்லாம் இனிது

(D) மன்னுயிர்க்கு மக்கள் மாநிலத்து அறிவுடைமை தம்மின்தம் எல்லாம் இனிது

(E) விடை தெரியவில்லை

99. கலைச்சொல் அறிக

Inscriptions

(A) கையெழுத்துப்படி

(B) கல்வெட்டு

(C) கருத்துப்படம்

(D) சொற்சுருக்கம்

(E) விடை தெரியவில்லை

100. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க.

பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி

(A) பாரதம், பீலி, புதுமை, பூமி, பெண்கள், பேருந்து

(B) பீலி, பூமி, பெண்கள், பேருந்து, பாரதம், புதுமை

(C) புதுமை, பெண்கள், பூமி, பாரதம், பேருந்து, பீலி

(D) பெண்கள், பேருந்து, பூமி, புதுமை, பீலி, பாரதம்

(E) விடை தெரியவில்லை

# பகுதி-ஆ (பொது அறிவு)

## Part-B (General Studies)

**வினாக்கள் : 101–200** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 101–200** **Total Marks : 150**

101. Chloroplyll present in the leaf is required for

இலையில் காணப்படும் பச்சையம் ——————க்குத் தேவைப்படுகின்றது.

(A) Photosynthesis
ஒளிச்சேர்க்கை

(B) Tropic movement
சார்பசைவு

(C) Transpiration
நீராவிப்போக்கு

(D) Nastic movement
திசை சாரா தூண்டல் அசைவு

(E) Answer not known
விடை தெரியவில்லை

102. Assertion [A] : Haemoglobin contains Iron.
கூற்று [A] : ஹீமோகுளோபினில் இரும்புச் சத்து உள்ளது.

Reason [R] : Iron deficiency leads to Anaemia.
காரணம் [R] : இரும்புச்சத்து குறைபாடு இரத்தசோகை நோயை ஏற்படுத்துகிறது.

(A) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி; [R] என்பது [A]-விற்கு சரியான விளக்கம் ஆகும்

(B) Both [A] and [R] are true; but [R] is not the correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி; ஆனால் [R] என்பது [A]-விற்கு சரியான விளக்கம் அல்ல

(C) [A] is true, but [R] is false
[A] சரி; ஆனால் [R] தவறு

(D) [A] and [R] is false
கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் தவறு

(E) Answer not known
விடை தெரியவில்லை

103. The state in which there is an accumulation of excess body fat with an abnormal increase in body weight is called
உடலில் அதிகப்படியான கொழுப்பு சேர்வதால் உடலின் எடை அசாதாரணமாக அதிகரிக்கும். இதனை ———————— என்பார்கள்.

(A) Diabetes
நீரிழிவு

(B) Polyuria
பாலியூரியா

(C) Obesity
உடல் பருமன்

(D) Polydipsia
பாலிடிப்சியா

(E) Answer not known
விடை தெரியவில்லை

104. The atmospheric carbon di oxide enters into the plants and fixed through the process called

வளிமண்டல கார்பன் டை ஆக்சைடு தாவரங்களுக்குள் சென்று நிலைப்படுத்தப்படும் நிகழ்வு ———————— என அழைக்கப்படுகின்றது.

(A) Photosynthesis
ஒளிச்சேர்க்கை

(B) Transpiration
நீராவியாதல்

(C) Respiration
சுவாசித்தல்

(D) Decomposition
சிதைத்தல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

105. Choose the right matches among the following :

கீழ்கண்டவற்றுள் சரியான ஒப்பிடுதலை தேர்ந்தெடுக்கவும் :

(a) Phenolphthalein in acidic medium – Colourless
அமில ஊடகத்தில் பினாப்தலீன் நிறமற்றது

(b) Phenolphthalein in basic medium – Yellow
கார ஊடகத்தில் பினாப்தலீன் மஞ்சள்

(c) Methyl orange in acidic medium – Pink/Red
அமில ஊடகத்தில் மெத்தில் ஆரஞ்சு இளஞ்சிவப்பு/சிவப்பு

(d) Methyl orange in basic medium – Colourless
கார ஊடகத்தில் மெத்தில் ஆரஞ்சு நிறமற்றது

(A) (a) and (c) are correct
(a) மற்றும் (c) சரியானவை

(B) (a) and (b) are correct
(a) மற்றும் (b) சரியானவை

(C) (b) and (c) are correct
(b) மற்றும் (c) சரியானவை

(D) (c) and (d) are correct
(c) மற்றும் (d) சரியானவை

(E) Answer not known
விடை தெரியவில்லை

106. The measurement which is used to measure the ignition delay of the fuel in diesel engine is

டீசல் எஞ்சினில் உள்ள எரிபொருளின் பற்றவைப்பு தாமதக் கால அளவை அளப்பதற்கு உதவும் அளவு

(A) Cetane number
சீட்டேன் எண்

(B) Octane number
ஆக்டேன் எண்

(C) Calorific value
கலோரி மதிப்பு

(D) Specific energy
தன் ஆற்றல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

107. The atomic mass of the middle element is nearly the same as average of atomic masses of other two elements.

மத்தியில் உள்ள தனிமத்தின் அணு நிறையானது ஏறக்குறைய மற்ற இரு தனிமங்களின் அணுநிறையின் சராசரிக்குச் சமமாகும்.

(A) Modern periodic law
நவீன ஆவர்த்தன விதி

(B) Newland's law of octaves
நியூலாந்தின் எண்ம விதி

(C) Dobereiner's law of triads
டாபர்னீரின் மும்மை விதி

(D) Mendeleev's law of periodicity
மெண்ட்லீவின் ஆவர்த்தன விதி

(E) Answer not known
விடை தெரியவில்லை

108. Match correctly the physical quantities with their SI units.
இயற்பியல் அளவுகளை அதன் SI அலகுகளுடன் சரியாகப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Pressure<br>அழுத்தம் | 1. | $Nm^{-1}$ |
| (b) | Area<br>பரப்பு | 2. | $Nm^{-2}$ |
| (c) | Surface Tension<br>பரப்பு இழுவிசை | 3. | N |
| (d) | Force<br>விசை | 4. | $m^2$ |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

109. Group of Stars is called
விண்மீன்களின் குழுக்கள் ———————— என்று அழைக்கப்படுகின்றன.

(A) Solar system
சூரிய மண்டலம்

(B) Constellation
நட்சத்திரக் கூட்டங்கள்

(C) Planets
கோள்கள்

(D) All the above
இவை அனைத்தும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

110. At higher altitude, the boiling point of a substance will
உயரமான இடங்களில், பொருளின் கொதிநிலை

(A) decrease
குறையும்

(B) increase
அதிகரிக்கும்

(C) decrease and then increase
குறைந்து, பின் அதிகரிக்கும்

(D) increase and then decrease
அதிகரித்து, பின் குறையும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

111. Which of the following statements are true about Himalayas?
இமயமலை பற்றிக் கூறப்படும் பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?

(i) The Greater Himalayas are also called Himadri.
பெரிய இமயமலை இமாத்ரி என்று அழைக்கப்படும்

(ii) The Greater Himalayas receive more rainfall compared to the lesser Himalayas and the Siwalik.
சிறிய இமயமலை மற்றும் சிவாலிக் குன்றுகளை ஒப்பிடும் போது இப்பகுதி அதிக மழையைப் பெறுகின்றது.

(iii) Major hill stations are located in the Himachal Range.
புகழ் பெற்ற கோடை வாழிடங்கள் இமயமலைத் தொடரில் அமைந்துள்ளன.

(A) (i) only
(i) மட்டும்

(B) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

112. Which is longest dam in the World?
உலகின் மிக நீளமான அணை எது?

(A) Nagarjuna Sagar Dam
நாகார்ஜுன சாகர் அணை

(B) Hirakud Dam
ஹிராகுட் அணை

(C) Bhakra-Nangal Dam
பக்ரா-நங்கல் அணை

(D) Damodar Valley Dam
தாமோதர் பள்ளத்தாக்கு அணை

(E) Answer not known
விடை தெரியவில்லை

113. Tidal forests are also known as
ஓதக்காடுகள் ———————— என்றும் அழைக்கப்படுகின்றன.

(A) Monsoon forests
பருவகாலக் காடுகள்

(B) Alpine forests
அல்பைன் காடுகள்

(C) Mangrove forests
அலையாத்திக் காடுகள்

(D) Rainy forests
மழைக் காடுகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

114. The headquarter of East – Central Railway is located in
கிழக்கு மத்திய இரயில்வேயின் தலைமையிடம் எங்கு அமைந்துள்ளது?

(A) Jabalpur
ஜபல்பூர்

(B) Hazipur
ஹாசிப்பூர்

(C) Jaipur
ஜெய்ப்பூர்

(D) Bilaspur
பிலாஸ்பூர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

115. The celebration of world population day July $11^{th}$ is started from the year

உலக மக்கள்தொகை தினம் ஜூலை 11ஆம் நாள் என்பது எந்த ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது?

(A) 1986
(B) 1987
(C) 1988
(D) 1989
(E) Answer not known
விடை தெரியவில்லை

116. Which of the following force is not in service for the management of disasters in the district organisation?

பின்வருவனவற்றுள் எத்துறை பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் செயல்படுகின்ற மாவட்ட அமைப்பு அல்ல?

(A) Postal Department
அஞ்சல் துறை
(B) Revenue Department
வருவாய்த் துறை
(C) Civil Administration
குடிமைப்பணி நிர்வாகம்
(D) Local Police
உள்ளூர் காவல்துறை
(E) Answer not known
விடை தெரியவில்லை

117. Which Article of Indian Constitution provides for an Election Commission?

இந்திய தேர்தல் ஆணையம் அமைக்க வழி வகை செய்யும் அரசியல் அமைப்புப் பிரிவு எது?

(A) Article 280
அரசியல் அமைப்புப் பிரிவு 280
(B) Article 302
அரசியல் அமைப்புப் பிரிவு 302
(C) Article 316
அரசியல் அமைப்புப் பிரிவு 316
(D) Article 324
அரசியல் அமைப்புப் பிரிவு 324
(E) Answer not known
விடை தெரியவில்லை

118. The articles that are related to citizenship are
குடியுரிமைப் பற்றி தொடர்புள்ள சட்டப்பிரிவுகளாவன

(A) Article 5 to 11
சட்டப்பிரிவு 5 – 11

(B) Article 14 to 18
சட்டப்பிரிவு 14 – 18

(C) Article 19 to 22
சட்டப்பிரிவு 19 – 22

(D) Article 25 to 28
சட்டப்பிரிவு 25 – 28

(E) Answer not known
விடை தெரியவில்லை

119. Choose the correct answer.

சரியான விடையைத் தேர்வு செய்க.

Elementary education is a fundamental right under Article

தொடக்கக்கல்வி கற்றலை அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டுள்ள சட்டப்பிரிவு எது?

(A) Article 51 A
சட்டப்பிரிவு 51 A

(B) Article 21
சட்டப்பிரிவு 21

(C) Article 29
சட்டப்பிரிவு 29

(D) Article 21 A
சட்டப்பிரிவு 21 A

(E) Answer not known
விடை தெரியவில்லை

120. Choose the correct answer:

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

POCSO Act

'போக்சோ' – சட்டம் என்பது —————— ஆகும்.

(A) Children Economic Exploitation
குழந்தைகள் மீதான பொருளாதாரச் சுரண்டல்

(B) Children Sexual Exploitation
குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டல்

(C) Children Sexual Abuse
குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்

(D) Protection of children from sexual offences Act
பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

121. Elected members of the Parliament from Tamilnadu

தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை

(A) Rajya Sabha – 18 members and Lok Sabha – 39 members.
மாநிலங்களவை 18 உறுப்பினர்கள் மற்றும் மக்களவை 39 உறுப்பினர்கள்

(B) Rajya Sabha – 28 members and Lok Sabha – 39 members.
மாநிலங்களவை 28 உறுப்பினர்கள் மற்றும் மக்களவை 39 உறுப்பினர்கள்

(C) Rajya Sabha – 81 members and Lok Sabha – 39 members.
மாநிலங்களவை 81 உறுப்பினர்கள் மற்றும் மக்களவை 39 உறுப்பினர்கள்

(D) Rajya Sabha – 80 members and Lok Sabha – 39 members.
மாநிலங்களவை 80 உறுப்பினர்கள் மற்றும் மக்களவை 39 உறுப்பினர்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

122. The authority to alter the boundaries of State in India rests with

இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் ———————— இடம் உள்ளது.

(A) The President
குடியரசுத் தலைவர்

(B) The Prime Minister
பிரதம அமைச்சர்

(C) State Government
மாநில அரசாங்கம்

(D) Parliament
நாடாளுமன்றம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

123. The Central Government Hindu Succession Act was amended in the year

மத்திய அரசு இந்து வாரிசுரிமை சட்டம் எந்த் ஆண்டு திருத்தங்களை மேற்கொண்டது?

(A) 2002

(B) 2003

(C) 2004

(D) 2005

(E) Answer not known
விடை தெரியவில்லை

124. The term "Pressure Group" originated by

அழுத்தக் குழுக்கள் என்னும் சொல்லினை உருவாக்கிய நாடு

(A) U.S.A. (United States of America)
அமெரிக்க ஐக்கிய நாடுகள்

(B) India
இந்தியா

(C) England
இங்கிலாந்து

(D) Canada
கனடா

(E) Answer not known
விடை தெரியவில்லை

125. The institution of Lokayukta was created first in Maharastra in the year

லோக்ஆயுக்தா அமைப்பு மகாராஷ்டிரா மாநிலத்தில் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

(A) 1970
(B) 1971
(C) 1972
(D) 1973
(E) Answer not known
விடை தெரியவில்லை

126. In which year Periyar E.V.R. published a English magazine under the title "Revolt"?

'ரிவோல்ட்' என்னும் ஆங்கிலப் பத்திரிக்கையை ஈ.வே.ரா. பெரியார் தொடங்கிய ஆண்டு எது?

(A) 1925
(B) 1928
(C) 1933
(D) 1934
(E) Answer not known
விடை தெரியவில்லை

127. Bharathi was displaced to ———————— area due to English intimidation.

ஆங்கிலேயர் அச்சுறுத்தல் காரணமாக பாரதி ———————— பகுதிக்கு இடம் பெயர்ந்தார்.

(A) Mahe
மாஹே
(B) Pondicherry
பாண்டிச்சேரி
(C) Bombay
பம்பாய்
(D) Kasi
காசி
(E) Answer not known
விடை தெரியவில்லை

128. The Indian National Army trials were held at
இந்திய தேசிய இராணுவத்தின் மீது விசாரணை நடைபெற்ற இடம் ———— ஆகும்.

(A) Agra Fort
ஆக்ரா கோட்டை

(B) Red Fort
செங்கோட்டை

(C) Fort William
வில்லியம் கோட்டை

(D) Fort St. George
புனித ஜார்ஜ் கோட்டை

(E) Answer not known
விடை தெரியவில்லை

129. Who has written "Amar Sonar Bangla" the National Anthem of Bangladesh?
"அமர் சோனார் பங்களா" என்ற வங்காள தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?

(A) Syed Abu Mohammad
சையது அபு முகம்மது

(B) Rajani Kanta Sen
இரஜினி கந்தா சென்

(C) Rabindranath Tagore
இரவீந்திரநாத் தாகூர்

(D) Mukunda Das
முகுந்தா தாஷ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

130. Political Guru of Kamaraj was
காமராசரின் அரசியல் குரு யார்?

(A) Rajaji
இராஜாஜி

(B) Sathyamurthi
சத்தியமூர்த்தி

(C) Nehru
நேரு

(D) Gandhi
காந்தி

(E) Answer not known
விடை தெரியவில்லை

131. Who was the Political Guru of Mahatma Gandhi?
மகாத்மா காந்தியின் அரசியல் குரு யார்?

(A) M.G. Ranade
M.G. ராணடே

(B) W.C. Banerjee
W.C. பானர்ஜி

(C) Balagangatara Tilak
பாலகங்காதர திலகர்

(D) Gopalakrishna Gokhale
கோபால கிருஷ்ண கோகலே

(E) Answer not known
விடை தெரியவில்லை

132. Which Day was observed on 8th January 1933?
1933-ஆம் ஆண்டு ஜனவரி 8-ஆம் நாள் எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?

(A) Temple Entry Day
கோவில் நுழைவு நாள்

(B) Day of Deliverance
மீட்பு நாள் (டெலிவரன்ஸ் டே)

(C) Direct Action Day
நேரடி நடவடிக்கை நாள்

(D) Independence Day
சுதந்திரப் பெருநாள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

133. Sivasubramanianar was executed on 13 September 1799 at
சிவசுப்பிரமணியனார் 1799 செப்டம்பர் 13 ஆம் நாள் தூக்கிலிடப்பட்ட இடம்

(A) Kayathar
கயத்தாறு

(B) Nagalapuram
நாகலாபுரம்

(C) Virupachi
விருப்பாட்சி

(D) Panchalamkurichi
பாஞ்சாலங்குறிச்சி

(E) Answer not known
விடை தெரியவில்லை

134. ———————— day was declared as 'Purna Swaraj Day' by the Indian National Congress.

இந்திய தேசிய காங்கிரசால் பூரண சுதந்திர நாளாகக் கொண்டாடிய நாள்

(A) January 26, 1930
ஜனவரி 26, 1930

(B) January 29, 1929
ஜனவரி 29, 1929

(C) August 16, 1930
ஆகஸ்ட் 16, 1930

(D) August 18, 1930
ஆகஸ்ட் 18, 1930

(E) Answer not known
விடை தெரியவில்லை

135. When a number is decreased by 25%, it becomes 120. Find the number.

ஓர் எண்ணின் மதிப்பை 25% குறைத்தால் 120 கிடைக்கிறது எனில் அந்த எண்ணைக் காண்க.

(A) 150

(B) 140

(C) 160

(D) 180

(E) Answer not known
விடை தெரியவில்லை

136. In an examination A got 25% marks more than B. B got 10% less than C and C got 25% more than D. If D got 320 marks out of 500. Find the marks obtained by A.

ஒரு தேர்வில் A என்பவர் Bயை விட 25% மதிப்பெண்கள் அதிகம் பெற்றுள்ளார். B என்பவர் Cயை விட 10% குறைவாக பெற்றுள்ளார். C என்பவர் Dயை விட 25% மதிப்பெண்கள் அதிகம் பெற்றுள்ளார். D என்பவர் மொத்த மதிப்பெண்கள் 500 க்கு 320 பெற்றுள்ளார் எனில் A என்பவர் பெற்ற மதிப்பெண்கள் எவ்வளவு?

(A) 405

(B) 450

(C) 360

(D) 400

(E) Answer not known
விடை தெரியவில்லை

137. Find the single discount in % which is equivalent to two successive discounts of 25% and 20% given on an article.

ஒரு பொருளின் மீது வழங்கப்படும் இரு தொடர் தள்ளுபடிகள் முறையே 25% மற்றும் 20% எனில், இதற்கு நிகரான ஒரே சமானத் தள்ளுபடி சதவீதத்தினைக் காண்க.

(A) 40%
(B) 45%
(C) 5%
(D) 22.5%
(E) Answer not known
விடை தெரியவில்லை

138. Find the HCF and LCM of the numbers 154, 198 and 286.

154, 198 மற்றும் 286 ஆகிய எண்களுக்கு மீ.பொ.கா. மற்றும் மீ.பொ.ம. க்காண்க.

(A) 22, 18018
(B) 154, 18018
(C) 18018, 22
(D) 191, 18018
(E) Answer not known
விடை தெரியவில்லை

139. The LCM of $8\,p^2qr$, $12\,p^2r^2$, $24\,pqr$ is

$8\,p^2qr$, $12\,p^2r^2$, $24\,pqr$ என்ற எண்களின் மீ.பொ.ம

(A) $24\,p^2qr^2$
(B) $8\,p^2qr^2$
(C) $12\,pr$
(D) $24\,pqr$
(E) Answer not known
விடை தெரியவில்லை

140. In a school, there is 7 period a day each of 45 minutes duration. If the school has 9 periods a day assuming the number of hours to be the same then the duration of each period in

ஒரு பள்ளியில் 45 நிமிடங்களைக் கொண்ட 7 பாட வேளைகள் உள்ளன. அப்பள்ளியில் பாட வேளைகள் 9 ஆக மாறும் போது ஒவ்வொரு பாட வேளையின் கால அளவு

(A) 25 (B) 20

(C) 35 (D) 30

(E) Answer not known
விடை தெரியவில்லை

141. The ratio of the income and to the expenditure of a family is 7 : 6. If the income is ₹ 21,000, then the savings is

ஒரு குடும்பத்தின் வரவுக்கும் செலவுக்கும் இடையே உள்ள விகிதம் 7 : 6 மற்றும் வரவு ₹ 21,000 எனில் சேமிப்பு

(A) ₹ 6,000 (B) ₹ 5,000

(C) ₹ 3,000 (D) ₹ 4,000

(E) Answer not known
விடை தெரியவில்லை

142. If A : B = 4 : 6, B : C = 18:5, then A : B : C is

A : B = 4 : 6, B : C = 18:5 எனில் A : B : Cன் விகிதம்

(A) 16 : 22 : 30 (B) 12 : 20 : 5

(C) 14 : 20 : 15 (D) 12 : 18 : 5

(E) Answer not known
விடை தெரியவில்லை

143. A sum of simple interest at $13\frac{1}{2}\%$ per annum to ₹ 2,502.50 after 4 years. Find the sum.

ஒரு தொகையானது ஆண்டுக்கு $13\frac{1}{2}\%$ தனிவட்டி வீதத்தில் 4 வருடங்களில் ₹ 2,502.50 ஐத் தருகிறது எனில் அந்த தொகையைக் காண்க.

(A) 1526
(B) 1256
(C) 2156
(D) 1625
(E) Answer not known
விடை தெரியவில்லை

144. A sum of ₹ 36,000 was lent out at S.I. and at the end of 2 years and 3 months. The total amount was ₹ 42,480. Find the rate of interest per year.

கடனாக வழங்கப்பட்ட அசல் ₹ 36,000க்கு 2 ஆண்டுகள் 3 மாத காலத்திற்கு பின் தனிவட்டி மூலம் பெறப்பட்ட மொத்த தொகை ₹ 42,480 எனில் வட்டி வீதம் யாது?

(A) 5%
(B) 6%
(C) 7%
(D) 8%
(E) Answer not known
விடை தெரியவில்லை

145. Which bank is called as lender of last resort?
எந்த வங்கி கடன் வழங்குவதில் கடைசி புகலிடம் என்று அழைக்கப்படுகிறது?

(A) Commercial Bank
வணிக வங்கி
(B) Indian Bank
இந்தியன் வங்கி
(C) Reserve Bank of India
ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா
(D) State Bank of India
ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா
(E) Answer not known
விடை தெரியவில்லை

146. If the compound interest on a certain sum at $16\frac{2}{3}\%$ for 3 years is ₹ 1,270. Find the simple interest on the same sum at the same rate and for the same period.

ஒரு தொகையில் கூட்டுவட்டி $16\frac{2}{3}\%$க்கு 3 ஆண்டுகளுக்கு ₹ 1,270 வட்டியாக கிடைக்கிறது எனில் அதே தொகைக்கு தனிவட்டி வீதத்தில் 3 ஆண்டு முடிவில் கிடைக்கும் வட்டித் தொகை எவ்வளவு?

(A) ₹ 1,080
(B) ₹ 1,000
(C) ₹ 1,090
(D) ₹ 1,070
(E) Answer not known
விடை தெரியவில்லை

147. The bacteria in a culture grows by 5% in the first hour, decreases by 8% in the second hour and again increases by 10% in the third hour. Find the count of the bacteria at the end of 3 hours, if its initial count was 10,000.

ஒரு வகையான பாக்டீரியா முதலாவது ஒரு மணி நேரத்தில் 5% வளர்ச்சியும், இரண்டாவது மணி நேரத்தில் 8% வளர்ச்சி குன்றியும், மூன்றாவது மணி நேரத்தில் 10% வளர்ச்சியும் அடைகிறது. தொடக்கத்தில் அதன் எண்ணிக்கை 10,000 ஆக இருந்தது எனில் மூன்று மணி நேரத்திற்குப் பிறகு அதன் எண்ணிக்கையைக் காண்க.

(A) 9266
(B) 9626
(C) 10626
(D) 10266
(E) Answer not known
விடை தெரியவில்லை

148. The internal and external radii of a hollow hemispherical shell are 3 m and 5 m respectively. Find the C.S.A. and T.S.A. of the shell?

ஓர் உள்ளீடற்ற அரைக்கோள ஓட்டின் உள் மற்றும் வெளிப்புற ஆரங்கள் முறையே 3 மீ மற்றும் 5 மீ ஆகும். ஓட்டின் வளைபரப்பு மற்றும் மொத்தப் புறப்பரப்பு காண்க.

(A) 213.71 $m^2$, 264 $m^2$
213.71 மீ$^2$, 264 மீ$^2$

(B) 214.70 $m^2$, 260 $m^2$
214.70 மீ$^2$, 260 மீ$^2$

(C) 210.71 $m^2$, 265 $m^2$
210.71 மீ$^2$, 265 மீ$^2$

(D) 210.71 $m^2$, 264 $m^2$
210.71 மீ$^2$, 264 மீ$^2$

(E) Answer not known
விடை தெரியவில்லை

149. The ratio of the volumes of a cylinder, a cone and a sphere, if each has the same diameter and same height is

சமமான விட்டம் மற்றும் உயரம் உடைய ஓர் உருளை, ஒரு கூம்பு மற்றும் ஒரு கோளத்தின் கன அளவுகளின் விகிதம்

(A) 1 : 2 : 3

(B) 2 : 1 : 3

(C) 3 : 1 : 2

(D) 1 : 3 : 2

(E) Answer not known
விடை தெரியவில்லை

150. A and B can together finish a work in 30 days. They worked together for 20 days and then B left. After another 20 days, A finished the remaining work. In how many day A alone can finish the job?

'A' மற்றும் 'B' ஆகியோர் இணைந்து ஒரு வேலையை 30 நாட்களில் முடிப்பர். இருவரும் சேர்ந்து 20 நாட்கள் வேலை செய்த பிறகு 'B' சென்று விடுகிறார். மீதமுள்ள வேலையை 'A' 20 நாட்களில் முடிப்பார் எனில், முழு வேலையை 'A' எத்தனை நாட்களில் முடிப்பார்?

(A) 60 days
60 நாட்கள்

(B) 54 days
54 நாட்கள்

(C) 50 days
50 நாட்கள்

(D) 40 days
40 நாட்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

151. A man starts his journey from Chennai to Delhi by train. He starts at 22.30 hours on Wednesday. If it takes 32 hours of travelling time and assuming that the train is not late, when will he reach Delhi?

ஒருவர் சென்னையிலிருந்து டெல்லிக்குச் செல்ல இரயிலில் புறப்படுகிறார். அவர் தனது பயணத்தைப் புதன்கிழமை 22.30 மணிக்குத் தொடங்குகிறார். எந்தவிதத் தாமதமுமின்றி இரயில் செல்வதாகக் கொண்டால் மொத்தப் பயண நேரம் 32 மணி நேரம் ஆகும். அவர் எப்பொழுது டெல்லியைச் சென்றடைவார்?

(A) Friday – 6:30 a.m
வெள்ளிக்கிழமை – 6:30 a.m

(B) Friday – 6:30 p.m.
வெள்ளிக்கிழமை – 6:30 p.m.

(C) Wednesday – 1:30 p.m
புதன்கிழமை – 1:30 p.m

(D) Thursday – 11:00 a.m
வியாழக்கிழமை – 11:00 a.m

(E) Answer not known
விடை தெரியவில்லை

152. An integer is chosen from the first twenty natural numbers. What is the probability that is a Prime Number?

முதல் இருபது இயல் எண்களிலிருந்து ஒரு முழு எண் சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்த எண் பகா எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

(A) $\frac{1}{6}$ (B) $\frac{1}{2}$

(C) $\frac{2}{5}$ (D) $\frac{3}{5}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

153. The mean of 5, 9, $x$, 17 and 21 is 13, then find the value of $x$.

5, 9, $x$, 17 மற்றும் 21ன் சராசரியானது 13 எனில், $x$ ன் மதிப்பு காண்.

(A) 9 (B) 13

(C) 17 (D) 21

(E) Answer not known
விடை தெரியவில்லை

154. The Mean of five numbers is 27. If one of the numbers is excluded, the Mean gets reduced by 2. What is the excluded number?

5 எண்களின் சராசரி 27. இதில் ஒரு எண்ணை நீக்கும் போது சராசரி 2 குறைகிறது எனில் விடுபட்ட எண் எது?

(A) 35 (B) 27

(C) 25 (D) 40

(E) Answer not known
விடை தெரியவில்லை

155. How many 8's are there in the following sequence, which are preceded by 5, but not immediately followed by 3?

கீழ்க்கண்ட எண் வரிசையில், எண் 5க்கு அடுத்து வரக்கூடியதும், எண் 3 தொடர்ந்து வராததுமாகிய எண் 8ன் எண்ணிக்கையைக் காண்.

5 8 3 7 5 8 6 3 8 5 4 5 8 4

7 6 5 5 8 3 5 8 7 5 8 2 8 5

(A) 1
(B) 2
(C) 3
(D) 4
(E) Answer not known
விடை தெரியவில்லை

156. Find the next number?
அடுத்து வரும் எண் யாது?

3, 10, 29, 66, 127, ______.

(A) 164
(B) 187
(C) 218
(D) 216
(E) Answer not known
விடை தெரியவில்லை

157. The next number in the following sequences :
பின்வரும் தொடர்வரிசையின் அடுத்த எண்

198, 194, 185, 169, ?

(A) 92
(B) 112
(C) 136
(D) 144
(E) Answer not known
விடை தெரியவில்லை

158. The value of a motor cycle depreciates at the rate of 15% per year. What will be the value of the motorcycle after 3 years hence, which is now purchased for ₹ 45,000.

ஒரு வாகனத்தின் மதிப்பு ஒவ்வோர் ஆண்டும் 15% குறைகிறது. வாகனத்தின் தற்போதைய மதிப்பு ₹ 45,000 எனில், 3 ஆண்டுகளுக்குப் பிறகு வாகனத்தின் மதிப்பு என்ன?

(A) ₹ 32,513
(B) ₹ 37,635
(C) ₹ 27,636
(D) ₹ 38,250
(E) Answer not known
விடை தெரியவில்லை

159. If the HCF of two positive integers is 1 then what will be the two numbers?

இரு மிகை முழுக்களின் மீப்பெரு பொது வகுத்தி 1 எனில் அவ்விரு எண்களும் எவ்வாறு அழைக்கப்படும்?

(A) Relatively prime
அவ்விரு எண்களும் சார்பகா எண்கள்

(B) Atleast one of them must be a Prime number
ஒரு எண்ணாவது பகா எண்ணாக இருக்க வேண்டும்

(C) Both are even numbers
இரு எண்களும் இரட்டை எண்கள்

(D) One is the multiple of the other
ஒரு எண்ணின் மடங்கு மற்றொரு எண்

(E) Answer not known
விடை தெரியவில்லை

160. 'ORCAM Read' is a device invented in 2021 to assist people with impairment in

2021ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட 'ஆர்காம்-ரீட்' என்ற சாதனம் கீழ்வரும் எந்த வகையான குறைபாடுள்ள மனிதர்களுக்கு பயன்படுகிறது?

(A) sight
பார்வை

(B) hearing
கேட்டல்

(C) eating
உண்ணுதல்

(D) mobility
இயக்கம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

161. How many countries are the members in BRICs?

BRICs என்ற அமைப்பில் எத்தனை நாடுகள் உறுப்பு நாடுகளாக இருக்கின்றன?

(A) 5

(B) 4

(C) 3

(D) 2

(E) Answer not known
விடை தெரியவில்லை

162. Annai Therasa Ninaivu Marriage Assistance scheme deals with

பின்வருவனவற்றுள் அன்னை தெரசா நினைவுத் திருமண உதவித் திட்டம் எதனை அடிப்படையாகக் கொண்டது?

(A) Poor Widows
ஏழை விதவைகள்

(B) Minority
சிறுபான்மையோர்

(C) Single Mothers
ஒற்றை தாய்மார்கள்

(D) Orphan Women's Marriage
அனாதைப் பெண்களின் திருமணம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

163. Which sports person is the author of the book 'Playing it my way'?

'Playing it my way' என்ற புத்தகத்தை எழுதிய விளையாட்டு வீரர் யார்?

(A) Kapil Dev
கபில் தேவ்

(B) Yuvaraj Singh
யுவராஜ் சிங்

(C) Sachin Tendulkar
சச்சின் டெண்டுல்கர்

(D) Sania Nehwal
சானியா நேவால்

(E) Answer not known
விடை தெரியவில்லை

164. Which of the following are incorrectly paired?

பின்வருபவற்றுள் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளன?

| | Zonal Railways<br>ரயில் மண்டலம் | | Head Quarters<br>தலைமையகம் |
|---|---|---|---|
| 1. | North Central<br>மத்திய வடக்கு | – | Allahabad<br>அலகாபாத் |
| 2. | Western<br>மேற்கு | – | Mangalore<br>மங்களூர் |
| 3. | Central<br>மத்திய | – | Jansi<br>ஜான்சி |
| 4. | East Central<br>மத்திய கிழக்கு | – | Hajipur<br>ஹாஜிபூர் |

(A) 1 and 2
1 மற்றும் 2

(B) 2 and 3
2 மற்றும் 3

(C) 1 and 4
1 மற்றும் 4

(D) 3 and 4
3 மற்றும் 4

(E) Answer not known
விடை தெரியவில்லை

165. The National Human Right Commission was established in the year
தேசிய மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு

(A) 1948 December, 9
1948 டிசம்பர், 9

(B) 1948 December, 10
1948 டிசம்பர், 10

(C) 1949 December, 9
1949 டிசம்பர், 9

(D) 1949 December, 10
1949 டிசம்பர், 10

(E) Answer not known
விடை தெரியவில்லை

166. Who succeeded K. Kamaraj as the Chief Minister of Madras Presidency?
கே. காமராஜருக்கு பின் மதராஸ் மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றவர் யார்?

(A) C.N. Annadurai
சி.என். அண்ணாதுரை

(B) M. Bakthavatsalam
எம். பக்தவத்சலம்

(C) M. Karunanidhi
மு. கருணாநிதி

(D) P.S. Kumarasamy Raja
பி.எஸ். குமாரசாமி ராஜா

(E) Answer not known
விடை தெரியவில்லை

167. The Announcement that, ECR (East Coast Road) will be renamed "Muthamizh Arignar Kalaignar Karunanidhi Salai" was made by the Chief Minister of Tamil Nadu M.K. Stalin in

ECR (கிழக்கு கடற்கரைச் சாலை) என்ற பெயரை "முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை" என்று அழைக்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்த நாள்

(A) February 02, 2022
பிப்ரவரி 02, 2022

(B) March 02, 2022
மார்ச் 02, 2022

(C) April 02, 2022
ஏப்ரல் 02, 2022

(D) May 02, 2022
மே 02, 2022

(E) Answer not known
விடை தெரியவில்லை

168. The term "Secularism" is derived from ———— language.

"சமயச்சார்பின்மை" என்னும் சொல் ———— மொழியில் இருந்து வந்தது.

(A) Greek
கிரேக்கம்

(B) Latin
இலத்தீன்

(C) Urdu
உருது

(D) English
ஆங்கிலம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

169. Indian ———— plays an important part in fostering unity and integration.

இந்தியாவில் ———— ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்க பெரிதும் உதவுகின்றன.

(A) Dance and Music
நடனம் மற்றும் இசை

(B) Literature and Grammar
இலக்கியம் மற்றும் இலக்கணம்

(C) Food and Customs
உணவு மற்றும் பழக்கவழக்கங்கள்

(D) Art and Architecture
கலை மற்றும் கட்டிடக்கலை

(E) Answer not known
விடை தெரியவில்லை

170. During the Pallava Period, the foreign merchants were known as
பல்லவர்கள் காலத்தில் அயல்நாட்டு வணிகர்கள் ———— என்று அறியப்பட்டனர்.

(A) Pattanaswamy
பட்டணசாமி

(B) Nanadesi
நானாதேசி

(C) Videshi
விதேசி

(D) Desi
தேசி

(E) Answer not known
விடை தெரியவில்லை

171. The Archaeological survey of India headquarters is located in
இந்திய தொல்லியல் துறையின் தலைமையகம் ———— உள்ளது.

(A) New Delhi
புது தில்லி

(B) Mumbai
மும்பை

(C) Chennai
சென்னை

(D) Kolkatta
கொல்கத்தா

(E) Answer not known
விடை தெரியவில்லை

172. Choose the correct pair from the following :
கீழ்க்கண்டவற்றுள் சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும் :

(A) Holkar – Pune
ஹோல்கர் புனே

(B) Bhonsle – Nagpur
பான்ஸ்லே நாக்பூர்

(C) Scindhia – Baroda
சிந்தியா பரோடா

(D) Peshwa – Indore
பேஷ்வா இந்தூர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

173. Identify the wrongly matched pair from the following :
கீழ்க்கண்டவற்றுள் எந்த இணை தவறாகப் பொருந்தியுள்ளது :

(A) Zahir-ud-din Babur – The conqueror of the World
ஜாகிருதின் பாபர் – உலகைக் கைப்பற்றியவர்

(B) Shah Jahan – King of the world
ஷாஜகான் – உலகத்தின் அரசர்

(C) Shahji Bhonsle – Shivaji's Father
ஷாஜி பான்ஸ்லே – சிவாஜியின் தந்தை

(D) Regent of Akbar – Bairam Khan
அக்பரின் பாதுகாவலர் – பைராம் கான்

(E) Answer not known
விடை தெரியவில்லை

174. ———————— is the epitome of Mughal architecture.
———————— முகலாயக் கட்டிடக் கலையின் சிறப்புமிக்க வடிவமாகும்.

(A) Gol Gumbaz
கோல் கும்பாஸ்

(B) The Shalimar Gardens
ஷாலிமர் தோட்டங்கள்

(C) Humanyun's Tomb
ஹீமாயூனின் கல்லறை

(D) Tajmahal
தாஜ்மஹால்

(E) Answer not known
விடை தெரியவில்லை

175. Who is the author of the book 'Why the Woman is Enslaved'?
'பெண் ஏன் அடிமையானாள்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) Singaravelar
சிங்காரவேலர்

(B) Muthulakshmi Ammaiyar
முத்துலட்சுமி அம்மையார்

(C) Periyar
பெரியார்

(D) Neelambikai Ammaiyar
நீலாம்பிகை அம்மையார்

(E) Answer not known
விடை தெரியவில்லை

176. ————— established a full fledged Printing Press in 1709, at Tranquebar.

1709-இல் தரங்கம்பாடியில் ————— ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்.

(A) Caldwell
கால்டுவெல்

(B) F.W. Ellis
F.W. எல்லிஸ்

(C) Ziegenbalg
சீகன்பால்கு

(D) Meenakshi Sundaram
மீனாட்சி சுந்தரம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

177. Pick the odd one out :

தவறான ஒன்றை தெரிவு செய்க :

Rettaimalai Srinivasan

இரட்டை மலை சீனிவாசன்

1. Founded the Adi Dravida Mahajana Sabha in 1893.

   1893-இல் ஆதி திராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கினார்.

2. Participated in the First and Second Round Table Conferences held in London.

   இலண்டனில் நடைபெற்ற முதல் மற்றும் இரண்டாம் வட்ட மேசை மாநாடுகளில் கலந்து கொண்டார்.

3. Frequently wrote columns under the pseudonym of "Chitraputtiran".

   அவ்வப்போது 'சித்திர புத்திரன்' எனும் புனைப் பெயரில் கட்டுரைகளும் எழுதினார்.

4. Was a signatory to the Poona pact of 1932

   1932-இல் செய்து கொள்ளப்பட்ட பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களுள் இவரும் ஒருவர்

(A) 1, 2 and 3
1, 2 மற்றும் 3

(B) 2 and 4
2 மற்றும் 4

(C) 3 only
3 மட்டும்

(D) 4 only
4 மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

178. Father of Velunachiyar was

வேலு நாச்சியாரின் தந்தையின் பெயர் —————— ஆகும்.

(A) Muthu Kumara Raghunatha Sethupathy
முத்து குமார ரகுநாத சேதுபதி

(B) Chellamuthu Vijaya Raghunatha Sethupathy
செல்லமுத்து விஜய ரகுநாத சேதுபதி

(C) Periya Udaiyar Sethupathy
பெரிய உடையார் சேதுபதி

(D) Sundaresvara Raghunatha Sethupathy
சுந்தரேஸ்வர ரகுநாத சேதுபதி

(E) Answer not known
விடை தெரியவில்லை

179. —————— is called the 'Lion of Sivaganga'.

'சிவகங்கையின் சிங்கம்' என அழைக்கப்படுபவர் ——————

(A) Periya Marudhu
பெரிய மருது

(B) Chinna Marudhu
சின்ன மருது

(C) Velu Nachiyar
வேலு நாச்சியார்

(D) Kattapomman
கட்டபொம்மன்

(E) Answer not known
விடை தெரியவில்லை

180. Which of the following statements are true about Keezhadi?
கீழ்க்காணும் கூற்றுகளில் கீழடியைப் பற்றிய சரியான கூற்றுகள் எவை?

(i) Evidence for brick buildings
செங்கற் கட்டுமானங்கள்

(ii) Tamil-Brahmi inscriptions on pottery
தமிழ்-பிராமி எழுத்துகள் கொண்ட மட்கல ஓடுகள்

(iii) Copper rods used for decorating eyelashes
கண்ணுக்கு மை தீட்டும் செப்புக் கம்பி

(iv) Keezhadi has been mentioned in Pathitrupattu
பதிற்றுப்பத்தில் கீழடியைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது

(A) (i), (ii) and (iv) only
(i), (ii) மற்றும் (iv) சரி

(B) (i), (ii), (iii) and (iv) are true
(i), (ii), (iii) மற்றும் (iv) அனைத்தும் சரி

(C) (i), (ii) and (iii) only
(i), (ii) மற்றும் (iii) சரி

(D) (ii) and (iv) only
(ii) மற்றும் (iv) சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

181. The name of the script used in the Sangam Age.
சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறை யாது?

(A) Kharoshthi
கரோஷ்தி

(B) Devanagiri
தேவநாகிரி

(C) Tamil-Brahmi
தமிழ்-பிராமி

(D) Grantha
கிரந்தம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

182. Tho' human beings in their birth are the same by diverse trade their worth isn't the same.

Trace the essence or meaning of this Kural

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான் – இக்குறள் வழிப் பெறப்படும் கருத்து யாது?

(A) Removal of Casteism
சாதி ஒழிப்பு

(B) Removal of Communalism
மத ஒழிப்பு

(C) Removal of Class System
வர்க்க ஒழிப்பு

(D) Removal of Varunasiram
வருண ஒழிப்பு

(E) Answer not known
விடை தெரியவில்லை

183. What according Valluvar is the great help rendered by the son to his father?

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி – என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

(A) Protection at his old age
முதுமையில் காத்தல்

(B) Saying good words
நற்சொல் கூறல்

(C) Give monetary help
பொருள் கொடுத்து உதவுதல்

(D) To bring honour
புகழும் படி வாழ்தல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

184. What will happen to a man who walks in grace deters and walks towards materialism according to Valluvar?

அருளை விரும்பி நடப்பவர், பிறர் பொருளை விரும்ப நேரிட்டால் அவர் என்ன ஆவார் என வள்ளுவர் வினவுகிறார்?

(A) Live a Good Life
நன்கு வாழ்வார்

(B) Live in Prosperity
செழிப்புடன் வாழ்வார்

(C) Get Destroyed
கெட்டொழிவார்

(D) Live with Relatives
சுற்றமுடன் வாழ்வார்

(E) Answer not known
விடை தெரியவில்லை

185. Who according to Valluvar is superior to the person who does charity and penance?

தானமும் தவமும் செய்பவர்களைவிட உயர்ந்தவர்கள் யார் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

(A) One who never slanders
புறங்கூறாதவர்

(B) One who speaks truth
உண்மை பேசுபவர்

(C) One who is learned
கல்வி கேள்விகளில் சிறந்தவர்

(D) One who talks sweetly
இனிதாகப் பேசுபவர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

186. What kind of wealth will give happiness according to Valluvar?

எப்படிப்பட்ட பொருள் ஒருவருக்கு இன்பத்தைத் தரும் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

(A) Donated Wealth
கொடையால் வந்த பொருள்

(B) Wealth by Rights
உரிமையால் வந்த பொருள்

(C) Wealth that is earned through fair means
தீதின்றி வந்த பொருள்

(D) Wealth by Warfare
போரால் வந்த பொருள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

187. How does Valluvar see those who fix their attention on impermanent things?

நிலையற்றவைகளை நிலையானவை என்று கருதுகிறவர்களை வள்ளுவர் எப்படிப் பார்க்கிறார்?

(A) In Excellence
பெருமையாக

(B) Deplorable
இழிவாக

(C) Hopeful
நம்பிக்கையாக

(D) Surprised
வியப்பாக

(E) Answer not known
விடை தெரியவில்லை

188. Match the following :
சரியாகப் பொருந்தியுள்ளதைக் காண்க.

| | | | |
|---|---|---|---|
| (a) | First Automobile industry<br>முதல் வாகனத் தொழிற்சாலை | 1. | Serampore<br>செராம்பூர் |
| (b) | National News print and Paper Mill<br>தேசியச் செய்தித்தாள் மற்றும் காகித ஆலை | 2. | Kolkata<br>கொல்கத்தா |
| (c) | Central Silk board<br>மத்திய பட்டு வாரியம் | 3. | Nepa Nagar<br>நேபா நகர் |
| (d) | First Paper Mill India<br>முதல் காகிதத் தொழிற்சாலை | 4. | Bangalore<br>பெங்களூரு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

189. Which of the following statements are true about the weakness of Green Revolution?

பசுமைப் புரட்சியின் பலவீனங்கள் என்பதைப் பற்றிய பின்வரும் வாக்கியங்களில் எவை சரியானவை?

(i) This strategy needed heavy investment in seeds and fertilizers.
விதைகள் மற்றும் உரங்களுக்குப் பேரளவு மூலதனம் தேவைப்படுகிறது.

(ii) Boosted the production of major cereals like wheat and rice.
முதன்மைப் பயிர்களான கோதுமை மற்றும் நெல் உற்பத்தி பன்மடங்காகப் பெருகியது

(iii) Larger chemical use reduced the soil fertility.
அதிக உரங்களின் பயன்பாடு நிலத்தின் செழுமைத் தன்மையைப் பாதித்தது

(A) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(B) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) only
(i) மட்டும்

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

190. In 1940 Bombay Plan was Presented by

1940 இல் பம்பாய் திட்டத்தை வழங்கியவர்கள்

(A) 8 Leading Politicians
எட்டு முன்னணி அரசியல் அரசியல்வாதிகள்

(B) 8 Leading Economists
எட்டு முன்னணி பொருளியல் அறிஞர்கள்

(C) 8 Leading Philosophers
எட்டு முன்னணி தத்துவவாதிகள்

(D) 8 Leading Industrialist
எட்டு முன்னணி தொழில் அதிபர்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

191. Per capita Income can be calculated by
தனிநபர் வருமானம் கணக்கிடப்படுவது

(A) National Income / Population
தேசிய வருமானத்திலிருந்து மக்கள் தொகையை வகுத்தல்

(B) National Income – Population
தேசிய வருமானத்திலிருந்து மக்கள் தொகையைக் கழித்தல்

(C) National Income + Population
தேசிய வருமானத்திலிருந்து மக்கள் தொகையைக் கூட்டுதல்

(D) National Income × Population
தேசிய வருமானத்திலிருந்து மக்கள் தொகையைப் பெருக்குதல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

192. The Aim of the Second Five Year Plan
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம்

(A) Removal of Poverty
வறுமை ஒழிப்பு

(B) Rapid Industrialization
விரைவான தொழில் வளர்ச்சி

(C) Employment
வேலைவாய்ப்பு

(D) Social Justice
சமூக நீதி

(E) Answer not known
விடை தெரியவில்லை

193. Which of the following point(s) is/are being included while defining 'Social Justice'.

கீழ்க்காண்பவற்றுள் எது/எவை 'சமூக நீதி'யை வரையறுக்கும் பொழுது சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

1. Equal rights
சம உரிமை

2. Equal opportunity
சம வாய்ப்பு

3. Equal treatment
சமமாக நடத்துதல்

4. Equal distribution of wealth for all
செல்வத்தினை அனைவருக்கும் சமமாக பகிர்தல்

(A) 1 only
1 மட்டும்

(B) 1 and 2 only
1 மற்றும் 2 மட்டும்

(C) 1, 2 and 3 only
1,2 மற்றும் 3 மட்டும்

(D) 1, 2, and 4 only
1,2 மற்றும் 4 மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

194. First Human Development Report by Tamil Nadu Government was published in the year

தமிழக அரசு முதல் மனித வளர்ச்சி அறிக்கை வெளியிட்ட ஆண்டு

(A) 2000
(B) 2003
(C) 2006
(D) 2004
(E) Answer not known
விடை தெரியவில்லை

195. Choose the correct matches type :
இதில் சரியானவை எவை?

1. NHRC – National Human Rights Commission
   NHRC – தேசிய மனித உரிமைகள் ஆணையம்

2. SHRC – Statutory Human Rights Commission
   SHRC – சட்டப்படியான மனித உரிமைகள் ஆணையம்

3. NCW – National Council for Women
   NCW – தேசியப் பெண்கள் மன்றம்

4. RTI – Right to Information Act
   RTI – தகவல் அறியும் உரிமைச் சட்டம்

(A) 1 and 2 are correct
1 மற்றும் 2 சரியானவை

(B) 1 and 4 are correct
1 மற்றும் 4 சரியானவை

(C) 2 and 3 are correct
2 மற்றும் 3 சரியானவை

(D) 2 and 4 are correct
2 மற்றும் 4 சரியானவை

(E) Answer not known
விடை தெரியவில்லை

196. Which Article of the Constitution provides for an Election Commission of India?

இந்திய தேர்தல் ஆணையம் அமைக்க வழிவகை செய்யும் அரசியலமைப்பு பிரிவு எது?

(A) Article 280
பிரிவு 280

(B) Article 315
பிரிவு 315

(C) Article 324
பிரிவு 324

(D) Article 365
பிரிவு 365

(E) Answer not known
விடை தெரியவில்லை

197. Which district is the top exporter of finished leather goods in the country?

இந்தியாவில் தோல் பொருட்களை அதிகளவில் தயாரித்து ஏற்றுமதி செய்யும் மாவட்டம் எது?

(A) Salem
சேலம்

(B) Vellor
வேலூர்

(C) Dindigul
திண்டுக்கல்

(D) Madurai
மதுரை

(E) Answer not known
விடை தெரியவில்லை

198. Tamil Nadu Health System Reform programme is implemented with the funding support of

தமிழ் நாடு சுகாதாரச் சீரமைப்பு திட்டத்திற்கு நிதி உதவி எதன் மூலம் கிடைக்கின்றது?

(A) World Bank
உலக வங்கி

(B) World Health Organization
உலக சுகாதார நிறுவனம்

(C) UNESCO
யுனெஸ்கோ

(D) National Health Mission
தேசிய சுகாதார மிஷன்

(E) Answer not known
விடை தெரியவில்லை

199. Literacy Rate in Tamil Nadu

தமிழ்நாட்டில் கல்வியறிவு விகிதம்

(A) 79.9%

(B) 80.9%

(C) 81.9%

(D) 82.9%

(E) Answer not known
விடை தெரியவில்லை

200. ——————— Scheme was designed to bridge the learning gaps that developed as a result of the pandemic imposed lock down.

பெருந்தொற்று நோயினால் முடக்கப்பட்ட காரணத்தால் உருவான கற்றல் குறைபாட்டை சரி செய்வதற்கு உருவாக்கப்பட்ட திட்டமே ——————— ஆகும்.

(A) Smart Classroom Scheme
மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப வகுப்பறை திட்டம்

(B) Computer Labs Scheme
கணினி ஆய்வகத் திட்டம்

(C) Illam Thedi Kalvi Scheme
இல்லம் தேடிக் கல்வி திட்டம்

(D) Illam Thedi Maruthuvam Scheme
இல்லம் தேடி மருத்துவம் திட்டம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

---